செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு.

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணி மீ 28 உ, அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

பிரதி விலை: சதம் 15

புத்-அஉ] யாழ்ப்பாணம்:- சாதாரண ஞு ஐப்பசி மீ கஙு உ வெள்ளிக்கிழமை (30-10-1970) [இலக்கம் 0

## மெய்கண்டார் தந்த சிவஞானபோதம்

இளைப்பாறிய அதிபர் திரு. பொ. இரத்தினம்
நயினாதீவு.

மனித உடம்பெடுத்த உயிர்கட்கே தக்கது இன்னது சாதகது இன்னது வென உணரும் உணர்வு உரியதாகும் எனினும் நிலையற்ற உலக எண்ணமே பெரும்பாலும் மக்களிடத்தில் உதிக்கின்றது. தன்னைப் பற்றிய உணர்விலும் உடம்பைப்பற்றியே சதா சிந்திக்கின்றனர். இவ்வுண்மையை விளக்கவே தாயுமானசுவாமிகள் "யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும் உறங்குவதாக முடியும்" என்று கூறுகின்ருர். இந் நிலையை மாற்றி உய்யுமவழி காட்டுவது சமயமேயாகும் இது அவரவர் அறிவிற் கேற்ப பலவாயின அவற்றுள் சித்தாந்த சைவ சமயமே பூரண முத்தியாகிய சிவசாயுச்சிய முத்தியை அளிக்குமென்பர் இதற்கு ஆதாரமாக உள்ளன சைவ சமய சாத்திரங்களும் தோத்திரங்களுமாகும் இவையிரண்டும் இரு கண்கள் போல்வன. இறைவனைப்பற்றியும் தன்னைப்பற்றியும் உலகைப் பற்றியும் உள்ள உண்மைகளை விளக்குவது சாத்திர நூலாகும். தோத்திரம சாத்திர நூலால் அறியப்பட்ட இறைவனை அறியும் பக்தியை வளர்க்கும. இரண்டும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போல்வன.

திருமுறை நூல்கள் தோத்திரங்களாகும். மெய்கண்ட சாத்திர நூல்கள் சாத்திரங்களாகும் இரண்டினதும் பொருள் ஒன்றே. மனிதனை இறவாப் பேரின்பம் பெறச் செய்தல். சாத்திர நூல்களில் மெய்கண்டதேவ நாயனார் அருளிய "சிவஞானபோதம்" என்னும் நூலே சைவசாத்திரங்களின் சிகரமாயுள்ளது.

மெய்கண்ட தேவர் திருமுனைப்பாடி நாட்டிலுள்ள பெண்ணாகடம் என்னும் நகரத்தில் அவதரித்தார். திருமுனைப்பாடிநாடு ஏலவே இரு தேவார ஆசிரியர்களையும், பின் இரு சந்தானாச்சாரியரையும் தோன்றச் செய்த பெருமையுடையது. இந்த நாடு இரண்டாம் கரிகாலன் காலத்தில் பல கோத்திரத்தாருக்கும் தேச பரிபாலன முறையில் பங்கிடப்பட்டது

இவற்றுள் ஒரு கோத்திரத்து ஒரு பிரிவினரே களப்பாளர் என்பார். சரித்திர நூலில் காணப்படும் களப்பிரர் எனப்படுவார் சமணச் சார்புடையவர். சைவம சார்ந்த களப்பாளர் குடியில் தோன்றியவர் அச்சுதர் இவர் கப்பரை ஆதரித்த சடையப்ப வள்ளலாரின் மகள்முறை பூண்ட மங்களாம்பிகை எனும் அம்மையாரை மணந்தார். அச்சுத களப்பாளர் நெடுங்காலம் பிள்ளைப் பேறிலாத காரணத்தால் தமது குலகுருவாகிய சதாசிவாசாரியரிடம் சென்று தங்குறையைக் கூறினர் ஆசாரியர் திருமுறைக் கண் கயிறு சாத்தியபோது திருஞான சம்பந்த சுவாமிகள் அருளிய "பேயடையா பிரிவெய்தும" எனும் தோத்திரம காணப்பட்டது அதிற் கூறியபடி அச்சுதர் மனைவியுடன் திருவெண்காடு சென்று சோமகுளம, சூரியகுளம், அக்கினி குளமென்னும் மூன்றுகுளங்களிலும் நீராடி வணங்கி வரபெற்று வீடு திரும்பினர். இதன் பலனாக கி. பி. 1225-ம் ஆண்டில் மங்களாம்பிகையார் ஓர் ஆண்குழந்தையைப் பெற்ருர்.

பெற்றூரால் அவ்வருட்பிள்ளைக்கு சுவேதவனப் பெருமாள் என்னும் திருநாமம இடப்பட்டது பெருமாள் சாமுசித்தராய்த் திருவவதாரஞ் செய்தமையால் மூன்ரும வயதிலேயே திருவெண்ணெய் நல்லூர் பொல்லாப் பிள்ளையார் கோயில் மண்டபத்தில் நிட்டைகூடி வந்தார் சாமுசித்தர் என்பார் முற்பிறப்பிலே சரியை கிரி

(வளர்ச்சி 2- ஆம் பக்கம்)

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

ஆதாரவே பரமான வறமதாகு
மாதிகவேந்தமிவற்றனைத்துமாகு
மாதரவற் றவரீகை யறமேயாகா
தாதலினு லாதரமே மூல மாகு
மாதரவே பிரகிருதி யான்மாவீச
னெனும்பொருளு மறிவிக்கு
மமலன் ருளு
மாதரவே யடைவிக்கு
மாதலாலே
யனைத்திஞுக்கு மாதரவே
மூலமாமே,
திருச்சிற்றம்பலம்
—சிவதருமோத்தரம்.

யாழ். மெய்கண்டார்கழகம்
ஆண்டுவிழாவும்
### மெய்கண்டார் குருபூசையும்

யாழ்ப்பாணம் மெய்கண்டார் கழகத்தின் ஆண்டு விழாவும் மெய்கண்டார் குருபூசையும் மகாநாடும் வண்ணை. வைத்தீஸ்வரன் கோவிலில் ஐப்பசித்திங்கள் 12, 13-ம் நாள்களாகிய வியாழன், வெள்ளி இரு தினங்களிலும் நிகழவிருக்கின்றன. 1ம்நாள் விழா ஷெ கழகத் தலைவர் திரு மு. ஞானப்பிரகாசம் B. A. B.Sc அவர்கள் தலைமையில் ஆரம்பமாகும் ஆலய வழிபாடு, ஆசி உரை, ஆண்டறிக்கை, தலைமை உரை இவற்றைத் தொடர்ந்து சொற்பொழிவுகளும் காஞ்சி மெய்கண்டாராதீனப் பண்ணிசைப்புலவர் பி. ஏ. எஸ். இராஜசேகரன் குழுவினரின் திருமுறைப் பண்ணிசையும் இடம்பெறும்.

வெள்ளிக்கிழமை காலை 8 மணி ஆலயவழிபாடு, சிவபூசை அபிஷேகம் ஆராதனை, சொற்பொழிவு ஆதியன நிகழும். மாலை நிகழ்ச்சிகள் திரு. இ. சபாலிங்கம் (யாழ் மத்திய கல்லூரி அதிபர்) அவர்கள் தலைமையில் ஆரம்பமாகும். இரு தினங்களிலும் பல சைவப்பேரறிஞர்களது ஆராய்ச்சிச் சொற்பொழிவுகள் இடம்பெறுகின்றன.

—:—

## முருகப் பெருமான் வணக்கம்

பண்டிதர், சைவப்புலவர் திரு. வ. சுப்பிரமணியம்
தும்பைநகர், பருத்தித்துறை.

இலங்கையின் தென்கிழக்குக் கரையில் ஒரு தனிக் கிராமம் உளது. அதன் பெயர் கதிர்காமம். அது, கரடிகளும், யானைகளும், புலிகளும் இன்னும கொடிய காட்டுக் காய்ச்சலும் (Malaria) நடமாடுகின்ற காட்டின் நடுவிலிருக்கின்றது அத்தலம்.

அம்பாந்தோட்டையிலிருந்து 29 மைல் தூரத்திலும், வதுளையிலிருந்து 87 மைல் தூரத்திலும், மிகவுங் கிட்ட இருக்கின்ற திசமகாராமா என்ற சொல்லப்படும் தபாலாபீசுள்ள பட்டினத்திலிருந்து 10½ மைல் தூரத்திலும் உள்ளதாய் மாணிக்க கங்கை யென்று சொல்லப்படும் திவ்விய நதியின் இடதுகரையில் உள்ளது. இம்மாணிக்க கங்கையென்றழைக்கப்படும் நதியானது வதுளையிலிருந்து 13 மைல் தூரத்திலுள்ள மானக்கொல்லா என்னுந் தோட்டத்திலிருந்து (Estate) உற்பத்தியாகி வருகின்றது.

இத்திவ்வியதலம் கிறிஸ்துவுக்கு முன்னுள்ள 3-ம் நூற்றாண்டில் (3rd century B. C.) மிக்க கண்ணியமாகக் கொள்ளப்பட்டுவந்தது கௌதம புத்தர் (Gautama Buddha) யோகத்திலிருந்து பரிசுத்தமாக்கப்பட்ட 16 தலங்களில் கதிர்காமமும் ஒன்ருகும். கதிர்காமத்திலிருந்த பிரபுக்கள் சங்கமித்தாவால் கொண்டுவரப்பட்ட அரசமரத்தை நல்வரவேற்று உபசரித்தார்கள். அம் மரக்கன்றில் ஒன்று இன்றைக்கும் காணத்தக்கதாக அக்கோயில் வீதியில் பெரிய மரமாய் நிற்கின்றது.

கிரிவிகாரை (Kiri Vihare) என்று சொல்லப்படும் புத்தர் கோயில் கதிர்காமத் தலத்திலிருந்து 1/3 மைல் தூரத்திலிருக்கிறது. இது கிறிஸ்துவுக்கு முன் - 300 B. C-ல் மஹாநகா என்னும் அரசனால் கட்டப்பட்டது

கதிர்காமம் ( (a city of divine glory and love)
= கதிர் = சோதி, ஒளி
காமம் = அன்பு, அருள் } சோதிஷகாமம்.

கார்த்திகேயர் கிராமம்=கதிர்காமம் என மருஉச் சொல்லாகவும் வழங்கப்பட்டு வருகின்றது. (Town or city of Karthikesar)

(Murugan) முருகன் இளமைப்பிள்ளை (the tender child) கோயிலிலுள்ள குருமார் (Priests) தீர்க்கமான கிரியைகளினுலை முருகனை வழிபடுகிருர்கள்; நாகரீகமற்ற பட்டிக்காட்டான் இறைச்சியும இரத்தமும் நிவேதனமாக வைத்து வணங்குகிருன். பூர்வீகவேடன் ஆதிகாலத்தில் தான் பழகின நடனங்களோடு வணங்குகிருன் தத்துவ ஞானியானவன் - அப்பெருமானை முழுமுதற் கடவுளாக எண்ணி மௌனத்தோடு ஆழ்ந்த தியானத்திலிருக்கிருன். முருகக்கடவுளின் மறுநாமம் சுப்பிரமணியர் அவரே அகில லோகங்களிலும் சர்வவியாபியாய் எல்லாப் பொருட்களும் தோன்றுதற்கும பின்பு மறைதற்கும் (ஒடுங்குதற்கும்) மூல தத்துவப் பொருளாயிருக்கிருர். மன்பதை பொருட்டு வைத்த பெருங்கருணையால் அவர் திருவுருவங் கொள்ளுகிருர். ஞானங்கொண்ட பாலசுப்பிரமணிய வடிவமுடையவராயும, துஷ்ட அசுரர்களை அளித்தற் பொருட்டு, யுத்தக்கடவுளாயும, நித்திய இளமையான முருகனுக்கவும வடிவம் எடுக்கின்ருர். தம்முடைய அடியார்கரு எங்கும் எப்பொழுதும அருள் செய்ய ஆயத்தமாயிருக்கிருர்.

அஞ்சுமுகந் தோன்றில் ஆறுமுகந் தோன்றும்
வெஞ் சமரந்தோன்றில் வேல் தோன்றும—நெஞ்சில்
ஒருகால் நினைக்கில் இருகாலுந் தோன்றும்
முருகா என்று ஓதுவார்முன.

(வளர்ச்சி 2- ஆம் பக்கம்)



எங்கள்
வாசக நேயர்கட்கும்
மற்றும் அபிமானிகட்கும்
தீபாவளித் திருநாளில்
அஷ்டைஸ்வரியங்களையும்
இஷ்டசித்திகளையும் நல்கவேண்டு
மென்று இதயபூர்வமாக
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்ருேம்.



சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ரானினம் வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம ரனாமமே சூழ்க வையக முந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சாதாரண௵ ஐப்பசி மீ கரு-௨ வெள்ளிக்கிழமை [1970]

## அகரமும் உலகமுதல்வனும்

இந்த உலகம் ஆதிபகவனாகிய கடவுளை முதலாக உடையயதென்பதை விளக்குவதற்கு திருவள்ளுவ நாயனார் அகரத்தை உவமையாகக் கூறுகின்றனர்

"அகர முதலவெழுத் தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"

எங்ஙனம் அகரமானது எழுத்துக்களெல்லாவற் றிற்கும் முதலாகவும உடனாகவும் வேறாகவும் இருக் கின்றதோ அவ்விதம் இறைவன் உலகுக்கு முதலாக வும் உடனாகவும் வேறாகவும் இருக்கின்றார்

மெய்கண்டதேவ நாயனாரும் கடவுளின் முதன் மைக்கு இவ்வுவமையே கூறுகின்றார்,

ஒன்றென்ற தொன்றேகா ணொன்றே பதிபசுவா
மொன்றென்ற நீபாசத் தொடுளைகா — ணென்றின்று
லக்கரங்க ளின்று மகர வுயிரின்றே
லிக்கிரம தென்னு மிருக்கு.

வேதம் ஒன்றென்றதற்குப் பொருள் ஒன்றென்ப தேயாம். பதிப்பொருள் ஒன்றே. இரண்டில்லை ஒன் றென்று சொல்லுகின்ற நீ பசு. அப் திப்பொருளின் வேறாய பசுவாகும் நீ மலததோடு கட்டுப்பட்டு கிற் கையினால் பசுவெனப்பட்டனை அகரவுயிரில்லையாயின் அக்கரங்களில்லை இம்முறைபற்றி வேதம் பிரமப் பொருளில்லையாயின் ஒரு பொருளுமில்லையென்று கூறும.

அருணந்தி சிவாசாரியரும் இவ்வுவமையைக் கை யாளுகின்றனர்.

ஒன்றென மறைகளெல்லா முரைத்திட வுயிர்க ளொன்றி
நின்றன னென்ம பன்மை நிகழ்த்துவ தென்னை யென்னி
னன்றவை பதிதா னென்றென் றறையுமக் கரங்க டோறுஞ்
சென்றிடு மகரம போல நின்றனன் சிவனுஞ் சேர்ந்தே.

ஒன்றாகிய அகரம் பலவெழுத்துக்களின் விரவி நிற்றல்போல் ஒருவனாகிய பரமான்மாப் பலவுயிர்களி லும் விரவிநிற்கின்றனன்.

உமாபதி சிவாசாரியாரும் கடவுளின் முதன் மைக்கு இவ்வுவமையையே கையாளுகின்றனர்.

"அகர வுயிர்போ லறிவாகி யெங்கும்
நிகரிலிறை நிற்கும் நிறைந்து"

அகரவுயிரானது எல்லாவெழுத்துக்களுக்கும் முத லாகவும் உடனாகவும் வேறாகவுமிருப்பது போல ஒப் பற்ற இறைவன் உலகில் நிறைந்து நிற்கின்றார்.

அகரம் உந்தியின்றும் நாதவடிவாய் எழுந்து கண்டத்தில் செவிக்குபுலனாகும்படி ஒலிக்கும். அவ்வொ லியினாலேயே மற்றைய அக்கரங்களியங்கும அவ் வொலியின்றேல் ஏனைய அககரங்கள இயங்கா. இவ் வாறே பிரமப்பொருள் இருத்தலினாலே எல்லாப்பொ ருள்களும் இயங்குகின்றன. பிரமப் பொருளின் றேல் ஒரு பொருளுமியங்கமாட்டாது. அகரமும மற் றைய அக்கரங்களும் வேறாயினும் அகரமாகிய ஒலியி னுடைய உதவியின்றி மற்றைய அக்கரங்கள் தனித்து நில்லாதவாறு போல பதிப்பொருளும பசுப்பொரு ளும் வேறாயினும் பதிப்பொருளையின்றிப் பசுப்பொ ருள் தனித்து இயங்காது.

---

## வண்ணை விசுவேசப்பிள்ளையார் கோவில் பரிபாலன சபை

வண்ணார்பண்ணை, ஐயனார் கோவிலடி விசுவேசப்பிள்ளை யார் கோவில் பரிபாலன மகா சபையின் இருபத்தைந்தாவது வருடாந்தப் பொதுக் கூட்டம் 22—10—70 வியாழக்கிழமை மாலை கோவில் மண்டபத்தில் தலைவர் திரு. தி. செல்லத்தி ரை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கோவில் மூர்த்தி கள் வாலஸ்தாபனம் செய்யப் பட்டு, மூலஸ்தானம், மகாமண் டபம் ஆகியவற்றினது கட்டடங் கள் விரைவாகப் புனருத்தார ணஞ் செய்யப்பெறுகின்றது. வெகுவிரைவில் கும்பாபிஷேக வைபவம் செய்யப்படவிருப்ப தால் முதற்கு வேண்டிய போதிய நிதியை அன்பர்கள், அடியார்க ளிடம் திரட்டுவதென ஏகமன தாகத் தீர்மானிக்கப்பட்டது.

1970—71 வருட உத்தியோகத் தர்களாக மேல வருவோர் தெரிவு செய்யப்பெற்றனர்

தலைவர்: திரு. சி செல்லத் துரை, மனேச்சரும், தனாதிகாரி யும்: ச. அமிர்தலிங்கம், காரிய தரிசி: வி. சிவசுப்பிரமணியம், கணக்குப் பரிசோதகர்: வ. பொன்னம்பலம்; பத்து பேர் கொண்ட நிருவாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது

---

## மெய்கண்டார் தந்த

1-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

யை யோகங்களைச் செய்து நிர்மலமாக்கப் பெற்ற அந்தக் கரணராகி மீளப்பிறக்கும் போதும் அந்த ஞானத்தோடு பிறந்து சிவபாவனை பண்ணு வோர் ஆவர்.

அங்ஙனம் கிட்டை கூடி யிருக்கும் நாளில் அகச்சந் தான குரவருளொருவராகிய பரஞ்சோதி முனிவர் அகத் திய முனிவரைக் காணும் பொருட்டு ஆகாயமார்க்கமா கச் செல்லுகையில் பிள்ளை யின் பெருமை யறிந்து கீழி றங்கி குழந்தையை ஆசீர்வ தித்து சிவஞானபோத உண் மைப் பொருளைத தாம் கேட் டவாறே உணர்த்தி மெய் கண்டார் என்னும் தீட்சாநா மத்தையுஞ் சூட்டிச்சென்றார் மெய்கண்டார் உலகம உய்யு மாறு சிவஞானபோதம் என் னும் நூலினை ஏது திருட் டாந்தங்களுடன் உரைத்தரு ளினர் இதனை அறிந்த குல குருவுப் சகலாகமபண்டிதரு மாகிய சதாசிவாச்சாரியார் பிள்ளையிடம வந்து மெய்ய றிவு பெற்று பிரதமசீடருமா கினர் இவரே அருணந்தி சிவாசாரியார் எனும் தீட்சா நாமம் பெற்று வழிநூலாகிய சிவஞான சித்தியாரை அரு ளிச்செய்தவர்.

அக்காலத்தில் வேத ஆக மங்கள், தோத்திர நூல்கள் பத்தியுடன் ஓதப்பட்டு வந்த போதும, இலக்கண வரம்பு டன் கூடிய ஒழுங்கு படுத தப்பட்ட சாத்திர நூல, அத துவித விளக்கநூல அரிதா கிய தன்மையினால் தோத்திர நூல்களின் மதனி பொருவ அறியமாட்டாது பலர்மயங்கி னர். உதாரணமாக, சைவ ஆகமங்கள் இறைவனால் தேற்றுவிக்கப் பட்டாலும், மேலாழ்ந்த வாரியாக நோக கும்போது கருத்து முரண் பாடுகள் காணப்படலாம. ஆகமஙகள் பொதுவகையி லும சிறப்பு வகையிலும அவரவர் பக்குவம் நோக்கிக் கூறபபட்டமையால் முரண் பாடு உள்ளனபோல் தோன் றும். இது தூலாருந்ததி நியா யம பற்றிக் காணப்படும முரண்பாடன்றி உண்மை யின் முரண்பாடன்று. தூலா ருந்ததி நியாயம என்பது பெரிதான ஒரு நட்சத்திரத் தை முன்னர்க்காட்டி அது வாயிலாலச் சிறிதான அருந் ததியைக் காட்டுதல் போலக் கொள்ளப்படும் ஒரு முறை யாகும் இம்முறை பற்றியே வேதம ஆகமம் உபநிடதம் முதலியவற்றுள்ளும் உட்பிரி வாகப் பொது வியல்புணர்த் தும நூல்ள் பொதுவென வும சிறப்பியல்பு (உண்மை) உணர்த்தும நூல்கள் சிறப்பு எனவும கொள்ளப்படுமென ஆன்றோர் கூறுவர். பொது வும சிறப்புமாயமைந்த நூல களும உள. மேற்கூறிய உண மை அறியாத மாந்தர்கள்

## முருகப்பெருமான் வணக்கம் ....

[1-ஆம் பக்கத்தின் வளர்ச்சி]

அபாயம் தோன்றும்போது, ஆறுதல் கொடுக்கும் முகம் தோன்றும் கொடிய சண்டைக் காலத்தில் அவ ரது வேல் தோன்றும். ஒருதரம் அவரை நினைத்தால் இரண்டுதரம் தோன்றுவார்.

இவ்வாறு யார்க்குத் தோன்றுவாரெனின், முருகா, முருகா என்று ஓதும் அன்பர்களுக்கு முன்னிலையில்.

ஒருமுருகா வென்றென் னுள்ளங்குளிர வுவந்தவுடனே
வருமுருகா வென்று வாய்வெருவாநிற்பக் கையிங்ஙனே
தருமுருகா வென்றுதான் புலம்பாநிற்ப, தையல்முன்னே
திருமுரு காற்றுப்படையுட்னே வருஞ் சேவகனே.

எனது மனம் ஒப்பற்ற முருகக்கடவுளே என்று உம்மை நினைக்கும் பொழுது குளிர்ச்சி யடை கின்றது. எனது வாய் மிக்க மகிழ்ச்சி கொண்டு விரைவில் வருகின்ற முருகக்கடவுளே, என்று புகழ்ந்து சொல்ல, பதைக்கின்றது; எனது கண்ணீர் விழ நான் முருகக் கடவுளே உமது அருளாகிய கையைத் தந்து காப்பவரே என்று அழ, அழகான ஆறுதலைச் செய் யும் படைக் கலத்துடன் என் (பெண்ணின்) முன்னே வரும் போர்வீரனே,

வீரகாவியமாகிய சமஸ்கிருத ஸ்கந்தபுராணம் ஐந்தாம் நூற்றாண்டிலும் அதன் தமிழ் மொழிப் பெயர்ப்பாகிய கந்தபுராணம் ஏழாம நூற்றாண்டிலும் (Saka year 700 corresponding with A D. 778) எழு தப்பட்டன. சங்கர மாத்மியத்தின் பன்னிரண்டு பகுதி களில் முதலாவதாகிய சிவரகசிய காண்டத்தின் முத லாறு காண்டங்களையும் பார்த்து. உற்பத்தி, அசுர, மகேந்திர, தேவ, தட்ச காண்டங்களாக, "வேத வே தாந்த, ஆகம தருமநூலதாம் விரிந்திடு புராணம், போத மார் முனிவரிசைத்திடு புராணமிருதிகள் சங்கிதைப் பொரு ந்து நாதமார் சடங்கஞ் சிப்பிகள் பிறவு நன்குணர் கச்சிமா முனிவன ஏதமில சகாப்தம் ஏழெனுநூறில் காந்தத்தை தமிழினா லிசைத்தான்"—

(— பரசிராம முதலியாரின் கந்தபுராண வசனம்)

இக் கந்தபுராணம் உயர்ந்த இலக்கியத் தகை மையிலும், சுத்த தெளிவான சொல்நடையிலும் (ஆங் கிலப் புலவராகிய உவேட்ஸ்வோத் Wordsworth அவர் களின சொற்பிரயோகம்போல) சிறப்புற்றிருக்கிறது இப்புராணத்திலுள்ள (ஞான) உயர்ச்சியும் மாட்சி யும் அப்புலவரின் நூலகளில் காணமுடியாது.

We the Saivas, especially in the Jaffna Peninsula consider it as one of our most sacred works next to the Vedas and Agamas and regularly recite it in our temples once a year with great solemnity.

சைவ சமயத்தவர்களாகிய நாங்கள் (பிரதான மாய் யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ளவர்கள்) மேன் மைதங்கிய இப்புராணத்தை வேதாகமங்களுக் கடுக்க எங்கள் பரிசுத்த நூல்களில் ஒன்றாகக் கருதி, வருடத் திற் கொருமுறை எங்கள் ஆலயங்களில் மிக்க பயபக் தியுடன் படனஞ்செய்து வருகிறோம.

சுப்பிரமணியப் பெருமான் - தூரத்திலுள்ள வட மலை (கைலைமலை) யில் உற்பத்தி செய்தாராயினும் அவர் எழுந்தருளியிருக்கும் (வீடு) வாசஸ்தானம் இப் பொழுதும், 20 நூற்றாண்டுகளுக்கு மேலாகவும் - தெற் கிலே இருக்கின்றது, அப்பெருமானை, பிரதானமாய் தமிழர்களே வழிபடுகிறார்கள். அவர்கள் (தமிழர்கள்) ஆதிகாலத்தில் குடியேறியிருந்த இடம் வட இந்தியா வாகக கருதப்படுகின்றது. அங்கிருந்து அவரையே தம் கள் கடவுளாக வழிபட்டு வந்தார்கள். அப்பெருமான் தெற்கே வர அவர்களும் அவருடன் வட இந்தியாவை விடுத் தெற்கே வந்து விட்டார்கள். தெற்கென்றது தென் இந்தியா, இலங்கை. கடல் கொள்ளப்பட்ட லெமூரியா கண்டம் முதலிய இடங்களாகும்.

---

வேதம், ஆகமம், திருமுறை என்பது தெளிவு. முதலியவற்றின் உண்மைப் பொருள் அறிய முற்பட்டும் மயக்க உணர்வு மேம்பாட் டால் பல சமய ஆதரவாளர் களாகினர் இந்நிலை இன் றும் தொடர்கின்றது. முற் றுணர்வுடைய சிவம் இந் நிலையைமாற்றவே திருமுறை முதலாம் நூல்களின் முடிந்த முடிவான அத்துவித உண் மையை சரித்திர வாயிலாக விளங்க வைக்குமாறு மெய் கண்டதேவநாயனாரை அருளி னர் என்பது மிகையாகாது. அக்காலத்தில் ஐக்கிய வாத சைவம் முதல் சிவாத்துவித சைவம் ஈறாக பல கொள்கை களை உடைய சைவ சமயங் கள் நிலவின. இவற்றின் குறைபாடுகளை எடுத்து விள க்கவும், வேதம், ஆகமம், தோத் திரம் முதலியவற்றின் ஒத்த கருத்தை நிலை நாட்டவும ம சிவஞானபோதம் எழுந்தது

இந் நூல் ஞான பாதப் பொருளைக் கூறும். சிவதீக் கை பெற்றுச் சிவாகமங்களை ஓதி சரியை, கிரியை யோகம் முதலாம நூல்களை ஆராய் ந்து உணர்ந்து வீடு பேறு விரும்புகின்றவர்க்கே இந் நூல் உரியதெனில் இதன் மேம்பாட்டைக் கூறவும் வேண்டுமோ. இந் நூலிற் கூறப்படும் பதி, பசு, பாசம் எனனும் முப் பொருளின் பொது இயல்பு பிரமாண முகத்தாலும் இலக்கணமுகத் தாலும் கூறப்பட்டு கேட்டல் சிந்தித்தல் எனும் இரு திறத் தால் உணரபபட்டும். சிறப் பியல்பு சாதனமுகத்தாலும், பயன் முகத்தாலும் கூறப் பட்டு கேட்டல், சிந்தித்தல் தெளிதல் நிட்டை கூடுதல் என்னும் நான்கு வகையா லும் உணரப்படும். ஆராய்க.

## அடைவு நகை ஏலவிற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை மேற்கு, க. செ. த. செ செல்லையாபிள்ளை அவர்களின் அடைவு கடையில் 1—4—68 முதல் 31—3—69 வரைக்கும் அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாதிருக்கும் நகைகள் 29—11—70 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியிலிருந்து மீட்கப்பட்ட பிற நீங்கலாக மிகுதி மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் என்னால் விற்பனவு செய்யப்படுமென்பதை இத்தால் அறிவிக்கிறேன்.

C. Ragunathan
கொமிஷனர்

வண்ணார்பண்ணை 22-10-70
எம். 331 23, 30-10-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

கந்தவனம் வேலாயுதபிள்ளை, கொட்டடி,
வண்ணார்பண்ணை மேற்கு, —வழக்காளி

வழ இல: M. B. 9384 எதிராக
(Dead) 1 கந்தன் ஆறுமுகம் பெண
2. சிவகாமி
3. யோசே அப்புத்துரை
எல்லோரும், கொட்டடி. —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 9384 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1970ம் ஆண்டு மார்கழி மாதம் 10ம் திகதி (10 12 70) வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 4387/-ம் 3-9-66 தொடக்கம் 2-9-67 வரைக்கும் ரூபாய் 3250/-க்கு 1% வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5% வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 357 சதம் 15 சதம்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று கொட்டடி இறை [illegible] தோட்டம் [illegible] (3 முன்று [illegible] (5) ஐந்து [illegible] (13¼) [illegible] K. [illegible] உரித்தாவு பெற்ற உலாந்தாவால 12-2-1967ம் ஆண்டு அளிக்கப்பட்ட 319 நம்பர் கொண்டதாயிருக்கின்றது.

"கமலபதி"  மு. நவரத்தினராசா
ஆஸ்பத்திரி வீதி  கொமிசனர் & விலைமதிப்பாளர்
மண்டைதீவு 25-10-70  எம 338 30-10 70

## கந்தசஷ்டி விரிவுரை

நல்லை, முருகப்பெருமான் கோவில் கந்தசஷ்டித் திருவிழாக் காலத்தில், நல்லை ஞானசம்பந்தர் ஆதீன கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் அவர்களால் தினமும் இரவு 8 மணி முதல் இன்னிசைச் சொற்பொழிவு நடாத்தப்பெறும். (ந நி)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: M B 10888
தம்பாப்பிள்ளை பாலசுப்பிரமணியம் கொக்குவில்
— வழக்காளி

எதிராக
1 தம்பையை ராஜகுலசிங்கமும்
2 பெண் ஈஸ்வரியும் —
கறுவேலடி ஒழுங்கை
கொக்குவில் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 10888 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1970-ஆம் ஆண்டு மார்கழி மீ 7-ம் திகதி (7-12-70) திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 4300/- 17-6-69 தொடக்கம் 26-5-70 வரைக்கும் ரூபா 2500-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 447-05

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோயிற்பற்று [illegible] துறை "காட்டுப் புலம்" நில ர 3, 3/4 ம கல வீடு கிணறு பனைகளும் எல்லை கிழக்கு சுப்பர் கார்த்திகேசனுடைய தன, வடக்கு ஒழுங்கை, மேற்கு கார்த்திகேசு பெண தைல்முத்துவுக்கும கனகரத்தினம் பெண் பொன்னுச்சிக்குமுரிய ஆதனம். தெற்கு முத்துவேலு பெண் அன்னப்பிள்ளைக்கும் தம்பையா முத்துசாமிக்கும் சுந்தரம பெண சின்ன மாவுக்குமுரிய ஆதனம். இதடங்கலும். பதவு இல: D 250/223

நீ. அன்ரனிப்பிள்ளை
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
22, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.
எம 342 30 10 70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டில்

யாழ்ப்பாண வண்ணார்பண்ணை கிழக்கு 4, அனைத்திர ஒழுங்கையைச் சேர்ந்த
1 தியாகராசா மாணிக்கவாசகரும்
2 பெண சற்குணபாலதேவியும் — வழக்காளிகள்
இல M B 8947 எதிராக
உடுவிலைச் சேர்ந்த
1. பொன்னம்பலம் நாகலட்சுமியும் — எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 8947-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் காணியை, 1970-ம் ஆண்டு கார்த்திகை மாதம 27-ந் திகதி (27-11-1970) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- ரூபா 4020/-ம், 19-3-67 தொடக்கம் 15-9-67 வரைக்கும் ரூபா 3000/- த்திற்கு 12 வீத வட்டியும் அதன் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 283/30 சதமும்.

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக், வலிகாமம் வடக்கு, உடுவிற் கோவிற் பற்று, உடுவில் இறை, "பொயபுலம்" எனறழைக்கப்படும் நிலப்பரப்பு 11-ம், 8, 5/8 குழியில் கிழக்குப் பக்கமாகவுள்ள வரகு நிலபரப்பு 5-ம் 12 5/16 குழியும், வீட்டின் கிழக்குப் பாகத்தில் 1/2 பங்கும் வாழை, செய்பயிர்களும், கிணறும் விபரிக்கப்பட்ட காணியின் வட - கிழக்குப்பக்கமாகவுள்ள கிணற்றின பங்கும். இவ்வாதனத்தின் எல்லைகளாவன: கிழக்கு சபாபதி சின்னத்தம்பியின ஆதனம். வடக்கு கதிர்வேலு. செல்லத்துரை பெண அன்ன பூரணம் ஆகியோரின் ஆதனம் மேற்கு கதிர்வேலு பெண அன்னபூரணத்தின ஆதனம். தெற்கு ஒழுங்கை. பதிவு இல M 356/269.

"வடிவேல் உதயம்"  சி. ஆ. ந. வடிவேலு J. P.
காங்கேசன்துறை வீதி,  கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
கோண்டாவில் 19-10-70  எம் 335 30—10—70

## AUCTION SALE

## கோட்டுக்கொம்மிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோர்ட்டில் வழக்கு, இல: 10647

ஆறுமுகம் இளையதம்பி வல்வெட்டி
எதிராக —வழக்காளி
1. ஆள்வாப்பிள்ளை பொன்னையாவும்
2. பெண் இலட்சுமி அம்மாவும்— சமரபாகு உடுப்பிட்டி
—எதிராளிகள்

மேற் குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படும் ஆதனத்தை 1970ம் ஆண்டு மார்கழி மாதம் 4-ஆம் திகதி (4-12-70) முற் பகல் 9-00 மணி தொடக்கம் குறித்த ஆதனத்திடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி உடுப்பிட்டி கோவிற்பற்று இமையணன் குறிச்சி "வல்லறைக் கொம்பறை" வி ர 2 ¾ எல்லை கிழக்கு சங்கரப்பிள்ளை இருவண்ணருக்கும் மருமகேசுக்குமுடைய வாதனம் வடக்கு ஒழுங்கை, மேற்கு சேனுராசா பெண் விசுவியானந்தச் செல்விக்குமுடையவாதனம் தெற்கு சுந்தையன் இராமனுக்கும மருமகேசுக்குமுடைய வாதனம். இவ்வெல்லைகளுக்குட்பட்ட முழு நிலம் பனைகள் வடலிகள் வேப்ப மரங்களுள சொர்யலாய் 1, 3/48 பங்கில் அரைவாசி (1/2) யும் தெற்கை நோக்கியிருக்கும வீட்டில் அரைவாசியும் மேற்கை நோக்கியிருக்கும் அடுக்களையில் அரைவாசியும். பருத்தித்துறையில் றிஜிஸ்ரார் பண்ணிய நெ: A 167/100

| | | |
|---|---|---|
| தீர்வைத் தொகை: | | ரூபா 2076-00 |
| 2-10-69 தொடக்கம் 16-2-70 வரை ரூ 1500/- க்கு வட்டி 12 வீதம் | | 67-50 |
| 16-2 70 தொடக்கம் 6-9-70 வரை ரூ 2143-50 க்கு 5 வீத வட்டி | | 58-42 |
| கோட்டுச் செலவு | | 198-10 |
| முழுத் தொகை | ரூபா | 2,400-02 |

புலோலி மேற்கு,  க நா சுப்பிரமணியம்
புலோலி, 24-10-70.  கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.
எம். 339 30—10—70.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ இல: M B 9539
1. அம்பலவாணர் பெண் புவனேஸ்வரியும்
2. அ பலவாணரும்,
இருவரும், தொல்புரம்
—வழக்காளிகள்
எதிராக
கிருஷ்ணபிள்ளை வேலாயுதபிள்ளை தொல்புரம் தற்போது இல: 76 பிரதான வீதி, திருகோணமலை. —எதிராளி

யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டின் M B 9539 ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும 2 துண்டுக்காணிகளை 1970ம் ஆண்டு கார்த்திகைமீ 25-ம் திகதி (25-11-70) புதன்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 6102/-ம், 31-10-67 தொடக்கம் இன்று வரைக்கும் ரூபாய் 5000/-க்கு 8 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 367-27

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம மேற்குப் பகுதி சங்கானைக் கோவிற்பற்று தொல்புரம் இறை பெரியவயல்' நெ. பர. 10 குழி (நெற்பரப்பு பத்தும் குழி ஏழும் எல்லை கிழக்கு அம்பலவாணசுவாமி கோவில் ஆதனம், வடக்கு வயிரமுத்து கதிரேசம்பிள்ளையினதும் வேலாயுதர் கார்த்திகேசுவினதும் ஆதனம், மேற்கு வேலாயுதர் கார்த்திகேசுவினது ஆதனம் தெற்கு சிவகுரு பெண் நாகேஸ்வரியினது ஆதனமும் இதன் மேற்காணும் ஆதனமும்

2 மேற்காட்டியபடி தொல்புரம் இறை "பெரிய வயல்" நெ பர 10 இப்போதைய அளவின்படி நெ. பர 9, 1/2 எல்லை கிழக்கு அம்பலவாணசுவாமி கோவில் ஆதனம், வடக்கு மேற்காணும் ஆதனம், மேற்கு சிவகுரு பெண நாகேஸ்வரியின் ஆதனம். தெற்கு மூளாய் முத்துக்குமாரசுவாமி கோவில் ஆதனம்.

சு. கந்தசாமி
கொமிஷனர் & விலைமதிப்பாளர்
19. சுவாமியார் வீதி
கொழும்புத்துறை, யாழ்ப்பாண
M. 344 30—10—70

திருவிளையாடற்புராணம் 4.

# அறம்புகழ்கொண்ட அருளுடைத்ததீச்

(தெல்லியூர் பிரமஸ்ரீ வ. குகசர்மா அவர்கள்.)

தமது யாகத்திலெழுந்த விருத்திராசுரனை துவட்டா என்பவன் நோக்கி "நீ இந்திரனோடு யுத்தம் செய்து அவனைக் கொல்லுதி" எனக் கட்டளையிட்டான். விருத்திரன் இந்திரனோடு போர் செய்தான். இந்திரன் போரில் ஆற்றாதவனாகி பிரமதேவரைத் தஞ்சமடைந்தான். பிரமதேவர் இந்திரன் யுத்தத்தில் வெல்லுவதற்குரிய உபாயம் ஒன்றைக் கூறினார்.

முன்னொரு காலத்திலே தேவர்களும அசுரர்களும அமிர்தம் பெறுவதற்காக பாற் கடலைக் கடையச் சென்றார்கள். அப்போது தம்மிடத்தில் உள்ள படைக்கலங்கள் யாவையும் தவ ஒழுக்கத்தால் உலகின் தீமைகளை வென்ற ததீசி முனிவரிடம் கொடுத்துச் சென்றார்கள். சில காலம் செல்ல ஆயுதங்களைப்பெற யாரும தம்மிடம வராமையால் தமது தவவலிமையினால் ததீசி முனிவர் ஆயுதங்கள் யாவற்றையும் விழுங்கி விட்டார், ஆயுதங்களெல்லாம் முனிவரின முதுகு முள்ளந்தண்டு எலும்பிலே போய்ப் பொருந்தி வச்சிராயுதமாக உருப்பெற்று விளங்கின. அந்த முதுகெலும்பாகிய வச்சிராயுதத்தைப் பெற்றால் அதனால் விருத்திரன் இறப்பான்"

பிரமதேவரின் இந்த உபாயத்தைக் கேட்ட இந்திரன் ததீசி முனிவரிடம் சென்றான. ததீசி முனிவர் இந்திரனை அகமும முகமும மலர்ந்து இன சொல்கூறி வரவேற்றார். இந்திரன் தான்வந்த காரணத்தைக் கூறினான். ததீசி முனிவரின் மனம் மிகுந்த மகிழ்ச்சியடைந்தது, அவருடைய அகமகிழ்ச்சி முகமலர்ச்சியாக வெளிக்காட்டியது இந்த மகிழ்ச்சி நிலையைப் பரஞ்சோதி முனிவர்

"ஆதவற் கண்டதா
மரையின் ஆனனப்
போதலர்ந் தின்னன
புகல்வ தாயினன்"

என்ற அடிகளால் விளக்குகிறார். சூரியனைக் கண்டவுடன் தாமரை மலரும். உடன் மலர்ந்த தாமரை மலர் மிகுந்தமகிழ்ச்சியைக் காட்ட உபமிக்கப் பெறுவது இராமரின் மிகுந்த மகிழ்ச்சியை எடுத்துக் கூறிய கம்பரும "அப்பொழுதலர்ந்த செந்தாமரையினை வென்ற தம்மா" எனக் கூறினார்.

ததீசி முனிவர் யாக்கையின் இழிவை நன்குணர்ந்தவர். "நடம பயில் கூத்தரில் நடிக்கும் ஐவரிக' இடமாய் [illegible] உடம்பு எமக்குச் சொந்தமல்ல. என்றோ இதை விட்டுச் செல்லத்தான் வேண்டும். இந்த உடம்பினலாய பயனென்ன? அறம புகழ் என்பவற்றை அடைதல், இறைவன் அருளைப் பெறல். எல்லாருக்கும் உடம்பினலாய இப் பயன்கள் கிடைப்பது அரிது மிகப் பலருடைய வாழ்க்கையும் "தடாகத்தில மலர்ந்த கொட்டி மலர் போன்று" விணுகக் கழிந்து விடுகிறது. ததீசி முனிவர் தாம் இதனை அடுத்ததற்குரிய நற் பயன் தமக்கு வருவதைக் கண்டார். நடுவு நிலையும் கருணையுமில்லாத விருத்திரனல் தேவர்கள் வருந்துகின்றார்கள். தான் உயிரை விட்டு முதுகெலும்பாகிய வச்சிரப்படையைக் கொடுத்தால் அவர்கள் துன்பம் நீங்கி மகிழ்ச்சியடைவார்கள். அதனல் அறமும் கிடைக்கிறது புகழும் கிடைக்கிறது "நத்தம போற் கேடு முளதாகுஞ் சாக்காடு வித்தகர்க் கல்லால் அரிது" என்றார் வள்ளுவர் ததீசியின் மனமகிழ்ச்சியை ஒரு செய்யுளிற் காட்டுகின்றார் நூலாசிரியர்.

"நடுத்தயா விலாதமை
நலியத் துன்பநோய்
அடுத்தயா வருந்திரு
வுடைய யாக்கையைக்
கொடுத்தயா னறம்புகழ்
கொள்வ னேயெனின்
எடுத்தயாக் கையின்பய
னிதனின் யாவதே"

ததீசி முனிவர் சிவயோக சமாதியில் நின்று, சுழுமுனை நாடியின் வழியே கபாலத்தைக் கிழித்துச் சென்று துறக்கம் புக்கார். அவருடை முதுகெலும்பாகிய வச்சிரத்தைப் பெற்ற இந்திரன் மின்னலையுடைய முகில்போல மகிழ்ச்சியுடன் நின்றான்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

M. B. 6597

1. குழந்தைவேலு வித்தியானந்தனும் மனைவி
2. இந்திராணியும், இருவரும் உரும்பிராய் — வழக்காளிகள்

எதிராக

1. சிவக்கொழுந்து இராசேந்திரமும் பெண்
2. பாக்கியமும், இருவரும் சுண்டிக்குளி — எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B. 6597-ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகளை 1970-ம் ஸு கார்த்திகை மாதம் 23-ம் திகதி (23-11-70) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபாய் 7104-1..-ம 23-4-64 தொடக்கம் 25-10-68 வரைக்கும் ரூபாய் 5000/-க்கு 10 வித வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வித வட்டியும் கோட்டுச செலவு ரூபாய் 343-45 ரூபா 900/- குறைய, இதில் 2-ம் ஆதனம் 2-2-60-ல், 6197-ம இலக்கத்தில் முடிந்த ஈட்டு உறுதிப்படி ரூபா 14000/-க்கும் 10 வித வட்டிக்கும் முதலாம் ஈடாகக் காட்டப்பட்டிருக்கிறது.

### ஆதன விபரம்

1, வடமாகாணம். யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளிக் கோவிற்பற்று சுண்டிக்குளி இறை கலவையடியும் கலவையடிக் குளமும், உத்தரவுபெற்ற அளவையாளர் J. மனுவல் அவர்கள் தயாரித்து 1962-ம் ஸு சித்திரை மீ 22-ம் திகதி யிடப்பட்ட 509 A இலக்கப் படத்தின்படி 2-ம் துண்டு நெற்பரப்பு 10 மறுபகுதி 11 6/10 குளி இரண்டு பகுதியும் சேர்ந்த முழு ஆதனம் நெற் பர. 10ம், 11 6/10 குளியும், இதில் மேற்குப் பக்கமாக நெற் பரப்பு ஐந்தும பதினொன்றுடன பத்தில ஆறு குளியும் அதிலுள்ள கட்டிடங்களும பயிர்வகைகளும் கிணறும் இந்த நெற்பர. 5 குளி 11, 6/10 க்கும் எல்லை கிழக்கு இக்காணியின் மிகுதிப்பகுதி வடக்கு சொல்லப்பட்ட படத்தின 1-ம துண்டு மேற்கு சிவகுரு வயித்திலிங்கத்தின் ஆதனம், தெற்கு முடிக்குரிய நிலம் இதடங்கலும் அதைச் சேர்ந்தவைகளும் கிழக்குப் பக்க றேட்டிலிருந்து தொடங்கி இக்காணி மிகுதிப் பகுதியின் தெற்கெல்லைப் பக்கமாக இக் காணிக்குப் போகும் 10 அடி அகல ஒழுங்கைப பாவிப்புரித்தும்.

2. ஷெ சுண்டிக்குளி இறை கலவையடியுப் கலவையடிக்குளமும், உத்தரவுபெற்ற அளவையாளர் J. மனுவல் அவர்கள் தயாரித்து 1962ம் ஸு சித்திரை மீ 22-ம் திகதியிடப்பட்ட 509 A இலக்கப் படத்தின்படி 2மதுண்டு நெற்பர. 10 மறுபகுதி 11 6/10 குளி இரண்டு பகுதியும் சேர்ந்த முழு ஆதனம். நெற் பர. 10-ம், 11, 6/10 குளியும் இதில் கிழக்குப்பக்கமாக (நெ பர. 6) நெற்பரப்பு ஆறும், அதிலுள்ள கல்வீடுகளும், கிணறும் பயிர்வகைகளும் இந்தப் பரப்பு ஆறுக்கும் எல்லை கிழக்கு றேட்டு, வடக்கு வயித்திலிங்கம்ஆறுமுகத்தினதும் மனைவி தங்கரத்தினத்தினதும ஆதனம், மேற்கு இக்காணியின் மிகுதிப்பகுதி தெற்கு முடிக்குரிய காணி, இக் காணியின தெற்கெல்லை வழிச்செல்லும் 10 அடி அகல ஒழுங்கைப் பாவிப்புரிமைபுற நீங்கலாக மிகுதியடங்கலும் அதைச் சேர்ந்தவைகளும், ஷெ நெற். பர, 10ம், ஷெ குளி 11, 6/10ம, முறையே D 207/285 யாழ்ப்பாணம, D, 266/145 யாழ்ப்பாணம் என்ற இலக்கங்களின்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: M, B. 10952

நாகலிங்கம் இராசதுரை சங்கிலியன்வீதி, நல்லூர் யாழ்ப்பாணம்

எதிராக —வழக்காளி.

கந்தர் வேலுப்பிள்ளை வெள்ளம்பொக்கடி கச்சாய் கொடிகாமம் — எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10952-ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக்காணிகள் 1970-ஆம் ஸு கார்த்திகை மீ 20-ஆம் திகதி (20-11-70) வெள்ளிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும். 1-ஆம் ஆதனம் விற்ற பின் மேற்குறிக்கப்படும் 2-ம் காணி காலை 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபா 1975-ம் 4-7-69 தொடக்கம் 18-1-70 வரைக்கும் ரூபா 1000-க்கு 12 வீத வட்டியு அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 287 சதம் 97.

### ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி கச்சாய் கோவில் பற்று கச்சாயிறை "மஞ்சற்கேணி" அல்லது "குஞ்சர் காடு" விலை பரப்பு 16½ இதற்கு எல்லை கிழக்கு சுப்பிரமணியர் கந்தையாவின் ஆதனம் வடக்கு செல்லப்பா பொன்னம்பலத்திற்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், மேற்கு சடையர் பிள்ளையினதும் மறு பேருக்குமுரிய ஆதனம். தெற்கு கணபதிப்பிள்ளை பெண் பொன்னம்மாவின் ஆதனம் பதிவு இலக்கம் F 157/49.

(2) வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்றிக் தென்மராட்சிப் பகுதி கச்சாய் கோவிற்பற்று "வெள்ளம் பொக்கடி"யிறை 'நாகர் சுவாமிப் புலம்' பரப்பு விலை லச்சம் [illegible]. இந்த ஆறு பரப்பில் கிழக்குப் பக்கத்தில் 5 குளி அளந்து விற்கப்பட்டது மிகுதி ஆதனம் பரப்பு விலை லாச்சம் 5 குளி 13 ஆ மிகுதி ஆதனத்திற்கு எல்லை கிழக்கு விஞாசித்தம்பி கந்தையாவினது [illegible] ஆதனம். வடக்கு ஒழுங்கை மேற்கு வேலுப்பிள்ளை வேலாயுதசுந்தரம். தெற்கு சரவணமுத்து ஆறுமுகசுந்தரம் [illegible] பதிவு இலக்கம F 337/98

"கமலபதி" மண்டைதீவு, 4-10-70

மு. நவரத்தினராசா, கொமிசனரும் விலைமதிப்பாளரும், எம 336 30-10-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சின்னத்துரை சுந்தரலிங்கம், காங்கேசன்துறை. —வழக்காளி

இல: M B 11165 எதிராக

கந்தசாமி மகன் சகுந்தலாதேவி காங்கேசன்துறை —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின M B 11165-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970-ஆம் ஆ. மார்கழி (டிசம்பர்) மீ 2-ம் திகதி (2-12-70) புதன்கிழமை முற்பகல் 10-00மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும.

தீர்வைத்தொகை:— முதல்வட்டி ரூபா 3140/-ம 11-10-6[illegible] தொடக்கம் 28-2-70 வரைக்கும் ரூபா 3,000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியுமகோட்டுச் செலவு ரூபா 388-51 சதமும

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி மயிலிட்டிக் கோவிற்பற்று வீரமாணிக்கதேவன் துறை இறை "காட்டுவளவும், படையாண்டான் வளவும்" வாகுசெய்கை நிலப்பரப்பு 2 (Lms V. C) இதில வடக்குப் பக்கமாக ஆட்சிப்படி பிரிக்கப்பட்ட நிலம் 13½ குளியும் அதிலுள்ள கல்வீடும், எல்லை கிழக்கு மாரிமுத்து பெண் சின்னப்பிள்ளைக்கும் மக்களுக்குமுரிய காணியும் ஒழுங்கையும் வடக்கு சிவசம்பு கைம்பெண் பொன்னம்மாவுக்கும் மக்களுக்குமுரிய காணி, மேற்கு துரைசாமி பெண் நாகம்மாவுக்கும் மக்களுக்குமுரியகாணி, தெற்கு ஒழுங்கை இது முழுவதும் வடக்கிலுள்ள கிணற்றுப் பங்கும் வழிவாய்க்காலுரித்தும்.

க. சரவணமுத்து

173, குருசோவீதி சுண்டிக்குளி, யாழ்ப்பாணம், 20-10-70

கொம்மிஷனர் & விலைமதிப்பாளர், எம் 332 30-10-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டில்

வழ இல: M B 9417

வைரமுத்து வல்லிபுரம சங்கானை கிழக்கு, —வழக்காளி

எதிராக

நாகேசு சபாரத்தினம் சங்கானை கிழக்கு —எதிராளி

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் - M. B.9417 ஆம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப்படி கீழே விபரிக்கப்படும ஆதனம் 1970-ஆம் ஆ மார்கழி மாதம் 4-ஆம் திகதி (4-12-70) வெள்ளிக்கிழமை காலை 10-00 மணியளவில் அக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதலும் வட்டியுமாக ரூபா 1915/- இன்னும் 21-9-67 தொடக்கம் 1-6-68 வரைக்கும் ரூபா 1250/-க்கு 8 வீத வட்டியும் கூட்டிக் கூட்டிய தொகைக்கு 11-5-68 தொடக்கம் முழுப்பணம் இறுக்கும் வரைக்கும் 5% வட்டியும கோட்டுச்செலவு (எற்பட்ட செலவு ரூபா 149/- வெலிபாத்துச் செலவு ரூபா 49-37 சதம் ஆணிமேலேற்படுஞ் செலவு ரூபா 241-74

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவிற்பற்று சண்டிலிப்பாயிறை 'பிரப்பிட்டித் தறையும் சேர்பிட்டித் தெணியும்' நெற்பரப்பு 25½ எல்லை கிழக்கு நாகலிங்கம் மகன் கமலாதேவியினுதனம், வடக்கு சுப்பையா விஜயரத்தினத்திற்குரிய வல்லிபுரம் கந்தையாவிற்குமுரிய ஆதனம் மேற்கு வாய்க்கால் [illegible] இளையதம்பி செல்லையாவிற்குமுரிய ஆதனம், தெற்கு சு விஜயரத்தினத்திற்கும், இளையதம்பி செல்லையாவிற்கு. கணபதிப்பிள்ளை பெண் தையல்நாயகத்திற்குமுரிய ஆதனங்கள். இது முழுவதும் யாழ்ப்பாணம் பதிவு கந்தோரில் பதிந்த இலக்கம் E. 343/197

கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

சு. கந்தசாமி, கொமிஷனரும்விலைமதிப்பாளரும், Commissioner, Valuer, 19. சுவாமியார்வீதி கொழும்புத்துறை, யாழ்ப்பாணம் எம் 341 30-10-70

தா. க பொன்னுத்துரை J P. கொமிஷனரும்விலைமதிப்பாளரும் "அகலகம்" 28/1. யாழ் வீதி, யாழ்ப்பாணம். 20-10-70 எம். 333 30-10-70,

## கோட்டு விற்பனவு விளம்பரம்

குமாரசுவாமி வன்னியசிங்கம் கைம்பெண் கோமதி வன்னியசிங்கம் 47, கண்டி றோட், யாழ்ப்பாணம். - வழக்காளி

வழ: இல M. B. 10285 எதிராக

1. யோசப் அருளப்புவும பெண்
2. திரேசம்மா இருவரும் நாரந்தனை —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B 10285-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக்காணிகளை 1970-ம் ஸு கார்த்திகை மாதம்25-ம் திகதி (25-11-70) புதன்கிழமை முற்பகல் 10மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

1ம் ஆதனம்: 25-11-70 காலை 10 மணிதொடக்கம் விற்கப்படும்.
2ம் ஆதனம்: 25-11-70 காலை 10-30மணிதொடக்கம் விற்கப்படும்
3ம் ஆதனத்தின் 1ம் எதிரிக்குரிய ஈட்டுரித்து காலை 11மணிதொடக்கம் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 11,100ம், 8-8-68 தொடக்கம 22-3-69 வரைக்கும் ரூபாய் 8000/-க்கு 15 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்குமவரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 475-37 இந்த செலவு காசில ரூபா 200 கொடுபட்டது.

### ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம தீவுப்பகுதி ஊர்காவற்றுறை கோவிற்பற்று நாரந்தனையிறை "தேவர்கோட்டைக்காடு" நிலப்பரப்பு 16 (பதினாறு) இது 24 தென்னைகளைக் கொண்டது இதற்குள் இருக்கும் வீடுகளும் கிணறும் செய்பயிர் வாழைபயிர்களும் இதற்கெல்லை கிழக்கு யோசேப் மனைவி இரத்தினத்திற்கும் தமிழ்ப்பிள்ளை பெண் மகிறற்றுக்குமுரிய ஆதனங்கள். வடக்கு றோட்டும் சந்தியாப்பிள்ளை சூசைப்பிள்ளையின் உரிமைக்காரருக்குரிய ஆதனங்கள், மேற்கு சந்தியாப்பிள்ளை சூசைப்பிள்ளையினுடைய காரருக்கும் பங்காளருக்கும் அலவுசுப்பிள்ளை அந்தோனிப்பிள்ளைக்குமுரிய ஆதனங்கள், தெற்கு [illegible] பெண் [illegible] ஆதனம் இதடங்கலும்.

2 மேற்படி இறை சங்கடைக்காடு நிலப்பரப்பு 10 (பத்தும்) செய்பயிர் வாழையிர்களும் இதற்கெல்லை கிழக்கு சூசைப்பிள்ளை [illegible] பிள்ளைகளுக்குமுரிய ஆதனம், வடக்கு தர்மலிங்கம் [illegible] ஆதனம், மேற்கு சூசைப்பிள்ளை இன்னாசிமுத்துவின் ஆதனம், தெற்கு வைத்தியாமபிள்ளை அமபுரோசுக்குரிய ஆதனம, இதடங்கலும்.

3 மேற்படி இறை [illegible] வெள்ளடை பரப்பு நெல்லாச்சம் 25 இதற்கு எல்லை கிழக்கு வாய்க்கால் வடக்கு ஒழுங்கை மேற்கு சரவணமுத்து பெண் அன்னப்பிள்ளைக்குரிய ஆதனம், தெற்கு இராமநாதி பெண் இளையபிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், இக்காணி நாரந்தனை சூசைப்பிள்ளை இன்னாசிமுத்து என்பவரால் 1957ம் ஆண்டு பங்குனி மீ 21 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு P. இராமலிங்கத்தால் 11097ம இலக்கத்தில் ரூபாய் 1000/-மேற்கூறிய 1ம எதிரி பேரில முடிந்த ஈட்டுறுதியின்படி 1ம எதிரிக்குச் சேரவேண்டிய முதல் வட்டி என்பனவும் அதற்குரிய சகல உரித்தும்.

"கமலபதி" ஆஸ்பத்திரி வீதி, மண்டைதீவு. 24-10-70

மு. நவரத்தினராசா, கொமிசனரும், விலைமதிப்பாளரும், எம். 337 30-10-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

1. சிவசம்பு நடேசனும் 2 பெண் சங்கநிதியும் தொண்டமனாறு. —வழக்காளிகள்

வழ: இல. M B 9063 எதிராக

1. சிதம்பரப்பிள்ளை மகாலிங்கமும் 2. பெண் அன்னம்மாவும் ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம். —எதிராளிகள்

யாழ்ப்பாணம டிஸ்திறிக் கோட்டின் M. B. 9063 இலக்க வழக்கில எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் காணிகளை 1970-ம் ஸு கார்த்திகை மாதம் 20-ந் திகதி (20-11-70) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 2017/-ம் 9-5-67 தொடக்கம் 4-6-68 வரைக்கும் ரூபா 1,500/-க்கு 12 வீத வட்டியும அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 282-12 சதமும்

### ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வண்ணார்பண்ணைப் பகுதி, வண்ணார்பண்ணை தென்-கிழக்கு கோவிற்பற்று "காக்கையன் வளவு" என்றழைக்கப்படும் இரண்டு பரப்பிலும் வீடும், நிலப்பரப்பும் மற்றும் பலவும். எல்லை கிழக்கு வாய்க்கால் எல்லை வடக்கு எரம்பு கைம்பெண் தெய்வானையின் ஆதனம். எல்லை மேற்கு ஒழுங்கை, எல்லை தெற்கு கணபதிப்பிள்ளை கைம்பெண் லட்சுமிப்பிள்ளையின ஆதனம்.

பதிவு இல; D 225/264

2. "காக்கையன் வளவில்" குறிக்கப்பட்ட காணித்துண்டுகளில ஒரு பரப்பில சொரியல்லாய் ½ பரப்பும், கிணற்றுப் பங்கும் எல்லை கிழக்கு வாய்க்கால், எல்லை வடக்கு எரம்பு பெண் சின்னத்தங்கத்தின் ஆதனம், எல்லை மேற்கு கையொழுங்கை, எல்லை தெற்கு வண்ணார்பண்ணை தென் கிழக்கில முதற் கூறிய காணி, யாழ்ப்பாணம காணிக் கந்தோர் பதிவு இல: D 243/60

"வடிவேல் உதயம" காங்கேசன் துறை வீதி, கொண்டாவில் 23-10-70

சி. ஆ த. வடிவேலு, J. P. கொமிஷனரும், விலை மதிப்பாளரும் ஏலவிற்பனையாளரும்: எம் 340 30-10-70.

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 30-10-1970 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர்: திரு. மு. மயில்வாகனம் அவர்கள்.